# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 100/மா/2023**
**நாள் : 30.08.2023**

திரு. G.M. சங்கர்,
மடிப்பாக்கம், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

1. The City Revenue Officer,
   Revenue Department,
   Greater Chennai Corporation,
   Rippon Building, Chennai – 600 003.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் -14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்கள்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 27.03.2023 நாளிட்ட மனு 28.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 100/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

> "கடந்த 24.06.2022ம் தேதி வெளியிடப்பட்ட ஏரியா சபை மற்றும் வார்டு கமிட்டி அமைப்பதற்கான அரசாணை G.O. [Ms] No.92/2022 வெளியிட்டதன் அடிப்படையில் மாவட்ட அரசிதழ் 20.12.2022 அன்று வெளியிடப்பட்டு சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளுக்கும் ஏரியா சபைகளுக்கு உட்பட்ட தெருக்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.
>
> 2. ஆனால் மண்டலம்-14, வார்டு 188, மடிப்பாக்கம் "ஏரியா சபை" அமைத்ததில் ஏரியா சபை 6"ல் அறிவிக்கப்பட்ட தெருக்களின் பெயர்களில் லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெருவின் பெயர்கள் விடுபட்டுள்ளன. கடந்த 2019 நாடாளுமன்ற தேர்தலிலும் 2021 சட்டமன்ற

தேர்தலிலும் மேற்படி மடிப்பாக்கம் லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெரு மக்கள் வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

3. இந்த சூழ்நிலையில் மேற்படி மடிப்பாக்கம் லட்சுமிநகர் மெயின்ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெரு மட்டும் ஏரியா சபை பட்டியலில் இடம்பெறாதது பகுதிவாழ் மக்களிடையே அதிர்ச்சியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேற்படி நீக்கப்பட்ட பகுதியில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் வசிக்கிறார்கள். அவர்களின் ஜனநாயக உரிமையை நிலைநாட்ட ஏரியா சபை என்கிற மகத்தான சபையில் தங்களது குரலினை எழுப்பமுடியாத அளவிற்கு தெருவின் பெயர்களையே நீக்கியுள்ளது கண்டனத்திற்குரியது. மேலும் தவறாமல் வரிசெலுத்துகிற மக்களின் ஜனநாயக உரிமையை பறித்தது போல மேற்படி நீக்கம் அமைந்துள்ளது. இந்த அரசிதழில் அறிவிக்கப்படாத தெருக்களில் வசிக்கும் மக்கள் மேற்படி ஏரியா சபையில் பங்குபெற முடியாத சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே இந்த நீக்கம் உடனடியாக சரிசெய்யப்படவேண்டும் என ஆம் ஆத்மி கட்சியின் மாநில வழக்கறிஞர் அணி சார்பில் வேண்டப்படுகிறது.

4. மேலும் இதேபோல் சென்னையில் உள்ள 200 வார்டுகளிலும் நீக்கப்பட்ட தெருக்களின் பெயர்களை உடனடியாக சரிபார்க்குமாறு அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துமாறும், அதன்பிறகு அந்தந்த ஏரியா சபையில் நீக்கப்பட்ட தெருக்களின் பெயர்களை சேர்த்து திருத்த பட்டியலை வெளியிட ஆவன செய்யவேண்டுமாய் கடந்த 23.12.2022 அன்று எழுத்துமூலமான கோரிக்கை மாண்புமிகு சென்னை மாநகராட்சி மேயர், சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு நேரில் சென்று வைக்கப்பட்டது.

5. மேலும் அதன் தொடர்ச்சியாக கடந்த 23.12.2022 அன்று சென்னை மாநகராட்சி குறைதீர்க்கும் புகார் இணையதளம் வழியாக புகார் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதுநாள்வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. அவசரகதியில் எதனையும் செய்யவேண்டிய கட்டாயம் இல்லை. நிதானமாக வடிவமைப்பு செய்து அனைத்து தரப்பு மக்களும் ஏரியா சபையில் பங்கேற்கும் வகையில் வழிவகை செய்திட ஆவன செய்யும்படி வேண்டப்படுகிறது.

6. மேலும் 100 நாட்கள் கடந்த பின்பும் நான் புகாரில் தெரிவித்துள்ள மாவட்ட அரசிதழில் எங்களது லட்சுமிநகர் மெயின்ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது மற்றும் 2வது தெரு பெயர்களை இதுவரை சேர்க்காமல் இருப்பது எங்களின் உரிமையை புறக்கணிப்பது போன்றே ஆகும். ஆகையால் தெரிந்தே தங்களின் கடமையை மீறி செயல்பட்டுள்ள அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்துகிறோம்.

7. ஆகையால் உடனடியாக போர்க்கால அடிப்படையில் Lr.No.VI/30583/2022 மாவட்ட அரசிதழ் 20.12.2022ல் அறிவிக்கப்பட்ட தெருக்களின் பெயர்களில் மண்டலம்-14, வார்டு 188, மடிப்பாக்கம் ஏரியா சபை 6ல், விடுபட்ட லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1 மற்றும் 2வது தெருவின் பெயர்களையும், மேலும் மற்ற மண்டலங்களில் உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்டுள்ள ஏரியா சபையில் விடுபட்ட தெருக்களின் பெயர்களையும் உடனடியாக சேர்த்து புதிய திருத்தப் பட்டியலை வெளியிட ஆவன செய்யுமாறும், புகார் அளித்து 100 நாட்கள்

கடந்தும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காத அலுவலர்கள் மீது முறைமன்ற நடுவச் சட்டத்தின்படி தக்க நடவடிக்கைகள் எடுக்க ஆவன செய்யும்படி தங்களை ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் பணிவுடன் வேண்டப்படுகிறது.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14ன் மண்டல அலுவலர் 25.4.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14-ன் மண்டல அலுவலர் 31.5.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்:24.06.2022 மற்றும் அரசிதழ் எண்.358, நாள்:24.06.2022ல் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு நகர உள்ளாட்சி (வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை) விதிகள் 2022ன்படி பெருநகர சென்னை முனிசிபல் சட்டம், 1919 பிரிவு 5 Cல் வார்டு கமிட்டி தோற்றுவித்தல் தொடர்பாகவும் , பிரிவு 5 Fல் ஏரிய சபை தோற்றுவித்தல் தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சிகளில் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை தோற்றுவித்தல் தொடர்பாக அரசாணை எண்.G.O. Ms. No.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) நாள்:24.06.2022ல் விதிகள் உருவாக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிகள் 24.06.2022 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

2. அதனடிப்படையில் 30.01.2023 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில், மண்டலம்-14, வார்டு 181 முதல் 191 வரை உள்ள அனைத்துத் தெருக்களையும் அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி அலுவலர்களின் ஆலோசனையின் பேரில் 10 ஏரியா சபைகளாக பிரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏரியா சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் மாமன்றம் அனுமதியளித்துள்ளது.

3. இந்நிலையில் மண்டலம் - 14, வார்டு 188, மடிப்பாக்கம் பகுதியில் ஏரியா சபா -6ல் அறிவிக்கப்பட்ட தெருக்களின் பெயர்களில் லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் ஆலயம்மன் நகர் 2வது தெருக்களின் பெயர்கள் விடுபட்டுள்ளதால் திரு. G.M. சங்கர் தமிழ்நாடு சட்டப்பிரிவு ஆம் ஆத்மி கட்சி அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அலுவலகத்தில் மனு சமர்ப்பித்துள்ளார்.

4. இந்நிகழ்வு குறித்து செயலர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு சமர்ப்பிப்பது யாதெனில் மண்டலம் - 14, மடிப்பாக்கம் வார்டு 188க்குட்பட்ட ஏரியா சபை அமைத்ததில் ஏரியா சபை 6ல் அறிவிக்கப்பட்ட தெருக்களின் பெயர்களில் லட்சுமி நகர் மெயின் ரோடு, ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் ஆலயம்மன் நகர் 2வது தெருக்களின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டுள்ளது என கள ஆய்வு செய்யப்பட்டதில் தெரிய வந்துள்ளது என்றும் எனவே மண்டலம் - 14, மடிப்பாக்கம் - வார்டு – 188க்குட்பட்ட ஏரியா சபை அமைத்ததில் ஏரியா சபை 6ல் சேர்க்கப்படாமல் தவறுதலாக விடுபட்ட தெருக்களான லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் ஆலயம்மன் நகர் 2வது தெருக்களின் பெயர்களை வார்டு 188 – ஏரியா சபை 6ல் சேர்ப்பதற்கும், சேர்க்கப்பட்ட தெருக்களின் பெயர்களை மீண்டும் அரசிதழில் சேர்த்து திருத்தம் செய்து வெளியிடுவதற்கும் கூடுதல்

தலைமை செயலாளர்/ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விடுப்பட்ட தெருக்களின் பெயர்களை அரசிதழில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் அரசிதழ் வெளியிடப்பட்ட பின்னர் மனுதாரரின் கோரிக்கை உடனடியாக பரிசீலிக்கப்படும் என்பதையும் கனிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 09.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 27.07.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 09.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 188 மடிப்பாக்கத்தில் ஏரியா சபை அமைக்கப்பட்டதில், ஏரியா சபை 6--ல் உள்ள தெருக்களின் பெயர்களில் லட்சுமி நகர் மெயின்ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது மற்றும் 2வது தெருவின் பெயர்கள் விடுபட்டுள்ளன. நீக்கப்பட்ட தெருக்களில் சுமார் 300க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். மேற்கண்ட விடுபட்ட அரசிதழில் அறிவிக்கப்படாத தெருக்களில் வசிக்கும் மக்கள் ஏரியா சபையில் பங்கேற்கமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இது குறித்து மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையர் மற்றும் மாநகராட்சி உயர் அலுவலர்களுக்கு புகார் மனு அனுப்பப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட விடுபட்ட தெருக்களின் பெயர்களை உடனடியாக சேர்த்து, புதிய திருத்தப் பட்டியலை மாநகராட்சியால் வெளியிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 27.3.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14-ன், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் 09.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.**

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மடிப்பாக்கம் வார்டு 188க்குட்பட்ட ஏரியா சபை அமைத்ததில், அங்குள்ள லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது மற்றும் 2வது தெருக்களின் பெயர்கள் தவறுதலாக விடுபட்டுள்ளன. மேற்கண்ட தவறு மாநகராட்சி அலுவலர்களுக்கு தெரிந்து நடக்கவில்லை. மேற்கண்ட விடுபட்ட தெருக்களின் பெயர்களை அரசிதழில் சேர்த்து திருத்தம் செய்து வெளியிடுவதற்கு பெருநகர மாநகராட்சி ஆணையரின் அனுமதியுடன் மாவட்ட ஆட்சியருக்கு 29.5.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 5.8.2023 அன்று நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்து, மேற்கண்ட விடுபட்ட தெருக்களை மீண்டும் அரசிதழில் பிரசுரம் செய்திட மாநகராட்சியால் ஆவன செய்யப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் எங்களால் அளிக்கப்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரின் 7.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14-ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் தனது புகார் மனுவில் மண்டலம் - 14, வார்டு -188, மடிப்பாக்கம் ஏரியா சபை அமைத்ததில் ஏரியா சபை 6ல் அறிவிக்கப்பட்ட தெருக்களின் பெயர்களில் லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெருவின் பெயர்கள் விடுபட்டதை சுட்டிக்காட்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலகத்தில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லையெனவும், நடவடிக்கை எடுக்காத சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கையும், விடுபட்ட தெருக்களின் பெயர்களை ஏரியா சபையில் சேர்க்கவும் ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

நகர்புற உள்ளாட்சிகளின் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை தோற்றுவித்தல் தொடர்பாக 24.6.22ல் வெளியிடப்பட்ட அரசாணையில் விதிகள் உருவாக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டு 24.6.2022 முதல் அமுலுக்கு வந்துள்ளது என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள லெட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெரு பெயர்களை வார்டு 188, ஏரிய சபை 6ல் சேர்ப்பதற்கும், சேர்க்கப்பட்ட தெருக்களின் பெயர்களை மீண்டும் அரசிதழில் சேர்த்து திருத்தம் செய்து வெளியிடுவதற்கும் கூடுதல் தலைமை செயலாளர்/ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் அனுமதி பெறப்பட்டு, விடுபட்ட தெருக்களின் பெயர்களை அரசிதழில் வெளியிட சென்னை மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14 அறிக்கையிலும், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

நகர்புற உள்ளாட்சிகளில் வார்டு கமிட்டி மற்றும் ஏரியா சபை தோற்றுவித்தல் தொடர்பாக விதிகள் உருவாக்கப்பட்டு 24.6.2022 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மனுதாரர் வார்டு 188ல் உள்ள தெருக்களான லட்சுமி நகர் மெயின் ரோடு மற்றும் ஆலயம்மன் நகர் 1வது மற்றும் 2வது தெரு ஏரியா சபையில் சேர்க்காமல் விடுபட்டுள்ளது என சுட்டிக்காட்டி 23.12.2022 அன்று மனு அளித்தும், இம்முறைமன்றம் 25.4.2023 நாளிட்ட அறிக்கையில் இப்பொருள் குறித்து அறிக்கை கோரப்பட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -14ல் நடவடிக்கை எடுக்காமல் 9.8.2023 அன்று மண்டல அலுவலர்களை நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.7.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர் தான் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்கள், மடிப்பாக்கம் வார்டு 188ல் விடுப்பட்ட தெரு பெயர்களை சேர்க்க நடவடிக்கை எடுத்து இருப்பது மண்டலம்-14ன் அலுவலர்களின் அலட்சியம் மற்றும் மெத்தனப்போக்கே என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், கடந்த 6 மாதங்களாக மேற்கண்ட விடுபட்ட தெருக்களில் வசிப்போருக்கு ஏரியா சபை கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாமலும் தங்களுக்கான குறைகளை சுட்டிக்காட்ட இயலாமலும் உள்ள சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு

குறிப்பாக

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

விதியின் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

5. மனுதாரர் 23.12.2022 அன்று மனு அளித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், இம்முறைமன்றம் 9.8.2023 அன்று விசாரணைக்கு மண்டல அலுவலக பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோரை ஆஜராக உத்திரவிட்ட பின்னர், காலதாமதமாக நடவடிக்கை எடுத்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14 சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விபரத்தை இம்முறைமன்றத்திற்கு 15 தினங்களுக்குள் அனுப்புமாறு பரிந்துரை செய்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

6. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி இப்பொருள் குறித்து மாவட்ட ஆட்சியருடன் இணைந்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடுகிறது.

7. அதேப் போன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் மற்ற மண்டலங்களில் ஏரியா சபையில் சேர்க்காமல் விடுபட்டுள்ள தெருக்களை கண்டறிய ஒரு குழு அமைத்து அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் விடுபட்ட பகுதிகளை ஏரியா சபையில் சேர்ப்பதை உறுதி செய்திடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The omission of Lakshmi Nagar Main Road, Alayaamman Nagar 1st and 2nd streets from the list of areas covered under Area Sabha by the delinquent officials concerned is condemned by this Forum in stringent terms. This exposes the lethargy, negligence, carelessness, casual, cavalier mindset apart from sheer lack of sense of devoir (duty) by the Zonal Officials of the Zone-14. But for the exposure by the petitioner this "black out" by the Zonal Corporation officials would have remained longer till the people of the omitted areas raise a protest through petitions and media. The Commissioner, Great Chennai Corporation is directed to initiate disciplinary action

against the delinquent officials involved in this glaring lapse. The Greater Chennai Corporation is directed to check up such omissions in the other zones also to avoid adverse publicity if such gaps are brought to notice. The Government in MAWS Department is being informed of this grave failure by the 14th Zonal Corporation Officials.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
எண்.57B, லஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.
2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3) The City Revenue Officer,
Revenue Department,
Greater Chennai Corporation,
Rippon Building, Chennai – 600 003.
4) மண்டல அலுவலர்,
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
8/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091.
5) கண்காணிப்புப் பொறியாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
6) முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலம், சென்னை – 9.
7) முதன்மைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
8) கண்காணிப்பு பொறியாளர் / மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்